பொய்ப்பிரசாரம் செய்வது அமெரிக்காவா ரஷ்யாவா!?

Phone No 4502 | Regd. No. M. 5458
விலை அரை அணு | இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. | MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (22—4—50) ❁ வெளியூர் (23—4—50) [இதழ் 232

ஸ்டாலின் மனிதனா பேயா என்ற நிலை ஏற்படக் காரணம் யார்?

எதிரியின் பலத்தை எடுத்துக் கூறும்படி பத்திரிகைகளுக்கு ட்ரூமன் உபதேசம்!

அமெரிக்காவை அயல் நாட்டார் கண்டு களிக்கவேண்டும்!

"ரஷியாவின் பொய்ப் பிரசாரத்தை அம்பலப்படுத்த, உலகிலுள்ள சுயேச்சை நாடுகள் உண்மைப் பிரசாரத்தை நடத்த வேண்டும்" என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் பத்திரிக்கை ஆசிரியர்கள் மாநாட்டில் கூறினார்.

பேசுவது அமெரிக்க பத்திரிக்கை ஆசிரியர் மாநாட்டில், கேட்டுக்கொள்வது உலக சுயேச்சை நாடுகளை! "பெரிது பெரிது புவனம் பெரிது" என்று தொடங்கும் பாடல் புவனம், நான் முகன், திருமால் ஆகிய எல்லோரும் தொண்டருள் அடக்கம், ஆகையால் "தொண்டர்தம்பெருமை சொல்லவும் பெரிதே" என்று முடிவடைகிறது. அதுபோன்று சுயேச்சை நாடுகள் என்று தோழர் ட்ரூமன்கூறும் எல்லா கம்யூனிஸ்டுப் பற்றற்ற நாடுகளும், அமெரிக்காதான் தலையானது என்று கருதுகின்றன. இந்தியாவுக்குக் கடன் வேண்டுமென்று செஞ்சும் தோழியர் விஜயலட்சுமி கூட அமெரிக்காவை சிங்கத்துக்கு ஒப்பிடுகிறார்! அதனால்தோழர் ட்ரூமனுக்குத் தெரியும் அமெரிக்காதான் முதலாளித்துவ நாடுகளின் தலைமை பீடத்தில் உள்ளதென்று. இது அமெரிக்கப் பத்திரிக்கைகளுக்கு ஒரு வேண்டுகோள், உலக நாடுகளுக்கு ஒரு உத்திரவு. உத்திரவை மேற்கொள்ளாவிட்டால் உதவியை நிறுத்தி விடுவாரே!

ரஷியா பொய்ப் பிரசாரம் செய்கிறதென்று தோழர் ட்ரூமன் கூறுகிறார். பொய்ப் பிரசாரம் எந்த நாட்டைப் பற்றி? ரஷியப் பத்திரிக்கைகளைப் புரட்டிப் பாருங்கள். அவைகள் முதலாளி நாடுகளில் சுதந்திரம் பறிக்கப் படுகிறதென்று கட்டுரை எழுதுவதுமில்லை; ரகசியமாகப் புகைப்படங்களெடுத்து வெளியிடுவதுமில்லை. காகஸஸ் மலையடிவாரத்தில் எண்ணெய்க்கிணறுகள்; சைபீரியன் பாலைவனத்தில் கோதுமை வயல்கள்; மாஸ்கோ நகரின் மாடமாளிகைகள்; தொழிலாளி மக்கள் களிப்போடு வேலை செய்யுங் காட்சி; தோழர் ஸ்டாலின் தொழிலாளி குழந்தைக்கு முத்தமிடும் கட்டம் ஆகியவைகளை அவைகள் வெளியிடுகின்றன. அதற்கு அடுத்தபடியாக முதலாளி நாடுகளாக இருந்து, பொதுவுடைமையான நாடுகள் எவ்விதத்தில் முன்னேறுகின்றன என்பன பற்றி வேண்டுமானல் எழுதுவார்கள்.

ஆனல் அமெரிக்கப் பத்திரிகைகள் வெளியிடுவதென்ன? ஸ்டாலின் ஒரு கொடியோன்; கொலைகாரன்; என்று கூறுவார்கள்; அதுமட்டுமல்ல அவன் இறந்துவிட்டான் அதை அறிவிக்காமல் மழுப்புகிறார்கள் என்றுகூட எழுதத் தயங்குவதில்லை. அமெரிக்கப் பத்திரிகைகள் செய்த பொய்ப் பிரசாரத்தால் அந்நாட்டு மக்கள் ஸ்டாலினை ஒரு 'பேய்' என்றே நினைத்துவிட்டார்கள். அவர் ஒரு பேயுமல்ல, பிசாசுமல்ல, ஒரு கிழ மனிதன் தானென்று ஒரு நிருபர் எழுதித் தெளியவைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது! மற்றும் பொதுவுடைமையின் தோல்வி; பொதுவுடைமையாளர்கள் படும் அவதி என்று பலவாறு தொடர்ந்து கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. இரும்புத் திரைக்கு அடுத்த பக்கம் என்ன இருக்கிறதென்பதைப்பற்றி வாரத்துக்கு இருமுறையாவது எதாவது உளரி வைத்தால்தான் அவர்களுக்குத் தூக்கம் பிடிக்கும்.

60 லட்சம் பிரதிகள் விற்பனையாகிறதென்று கூறப்படும் 'லைப்' இதழின் சென்ற மாதப் பிரதி யொன்றை புரட்டிப் பாருங்கள். 'ரஷியாவின் ஆயுதபலம்' செஞ்சீனாவில் பஞ்சம், 'பல்கேரியாவில் படுகொலை' என்றவாறு தான் கட்டுரைகள் இருக்கும் 'கோலியாஸ்' என்னும் மற்றொரு இதழ் 'ஸ்டாலின் சாதாரண மனிதரே' என்று தலையங்கம் தீட்டியுள்ளது! எது பொய்ப் பிரசாரம்?

அடுத்து அவர் கூறுவதைப் பாருங்கள் அதைவிட வேடிக்கையாக இருக்கிறது

'மற்றைய நாட்டு மக்களுக்கு (ரஷியாவைப்) பற்றிய உண்மையான செய்திகளைத் தர வேண்டும்'

இரும்புத் திரை, எட்டிப் பார்க்காதே என்று கூறுகிறார் தோழர் ஸ்டாலின். எட்டிப் பார்த்து ஒன்றும் தெரிந்துகொள்ள முடியாவிட்டாலும், ஏதோ கதையளந்துவிடுகின்றன அமெரிக்கப் பத்திரிக்கைகள். கதையளக்காதீர்கள், எப்படியாவது ஐந்தாம்படை வேலை செய்து உண்மையைக் கண்டறியுங்கள் என்கிறார் தோழர் ட்ரூமன். 'ரஷி

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

ஏழு கம்யூனிஸ்டுகள் சுட்டுத்தள்ளப்பட்டனர்!

போலீசாரின் 'கைவன்மை'

குண்டூர், ஏப். 20—

குண்டூருக்கு அருகிலுள்ள பெரிசோலா என்ற சிற்றூருக்கருகில், போலீசார் 30 கம்யூனிஸ்டுகளைத் துரத்திச் சென்று 5 பேரைச் சுட்டுக் கொன்று விட்டார்களாம் மற்றவர்கள் தப்பி ஓடிவிட்டார்களாம்!

இறந்துபோன கம்யூனிஸ்டுகளின் பிரேதங்கள் சவப் பரிசோதனை செய்யப்பட்டதாம்

சுட்டுத்தள்ளப்பட்ட தோழர்கள் வீரய்யா, தனஞ்சயடு, கர்னம், ஸ்ரீராமுலு, பி. பிரகாசம்; குமிடி கோடையா என்பவர்களாவார்கள்.

கம்யூனிஸ்டுத் தோழர்களின் பலாத்கார நடவடிக்கைகளை நாம் ஆதரிக்கவில்லையென்றாலும் அவர்களைக் காட்டு மிருகங்களைப்போல் சுட்டுத்தள்ளுவதை வீரத்தனம் என்று கூற முடியாது.

அரசாங்கக்காடுகளில், கொடிய விலங்குகளைக் கூடச் சுட்டுத்தள்ள முடியாது. சட்டம் அதை மறுக்கிறது. ஆனல், மனிதர்கள் ஏதோ ஒரு கொள்கையில் அளவு கடந்த பற்று வைத்திருக்கின்ற காரணத்தால், ஆட்சியாளருக்குப் பயந்து காடுகளில் ஒளிந்துள்ளவர்கள் சுட்டுத்தள்ளப்படுகிறார்கள் வேடிக்கையாகத்தான் இருக்கிறது சுதந்திர ஆட்சியில்!

கம்யூனிஸ்டுகள் பலாத்காரச் செய்கையில் ஈடுபட்டிருக்கிறார்களென்றால், அவர்களை எவ்வளவு மான்றுவது கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தி; தகுந்த நியாயம் வழங்கு. இவ்வாறு கண்ட இடத்தில் சுட்டுத்தள்ளுவானேன் சிறைக்கூடமேன்; நீதிமன்றமேன்; தூக்குமேடைகூடத் தான் ஏன்?

மேலும் இரண்டு பேர்!

குண்டூர் ஜில்லாவில் கொண்டப்பல்லி காட்டுக்கருகில் 2 பேர் சுட்டுக்கொல்லப் பட்டனர். போலீஸ் துப்பாக்கிக் குண்டுபட்டு இறந்த காரணத்தால், இவர்கள் கம்யூனிஸ்டுகளாகத்தான் இருக்க வேண்டும்!

கிராமமக்களுக்குத்தொல்லை கொடுக்கிறார்கள் என்ற காரணத்தால், அவர்களைப் பார்த்துச் சுடுகிறாய், சுடுவது அவர்களைக் காயப்படுத்திக் கைப் பற்றவேண்டுமென்ற நோக்கத்தோடு இருக்கக்கூடாதா? ஆங்கிலத்தில் கூறுவார்கள் Shoot to kill என்று: அதாவது கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு சுடு என்பதாம். அதுவாக இருக்கிறதே உன் எண்ணம், நியாயமா என்றுதான் கேட்கிறோம்.

ரஷியாவுக்கும் மேல்நாடுகளுக்கும் இடையே சமரசம்

ஐ. நா. பொதுக்காரியதரிசி மாஸ்கோ செல்வார்

லண்டன், ஏப். 21—

கிழக்கிற்கும் மேற்கிற்கும் சமரசம் செய்து வைத்து, இருபது ஆண்டுகாலத்திற்கு அமைதி நிலவச் செய்வதற்கான ஒரு திட்டத்தை ஐ. நா. காரியதரிசி ஜெனரல் டிரிக்வெல் தயாரித்திருக்கிறார்.

இவர் இத்திட்டத்துடன் அடுத்த வாரம் லண்டனில் எதிர்பார்க்கப்படுகிறார். பின்னர் இவர் மாஸ்கோ செல்லவும் உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

ரஷியாவுக்கு வருவதாக தெரிவித்த இவர் கடிதத்திற்கு இன்னும் பதில் வரவில்லை.

அடுத்த மாதம் ஐரோப்பா வரும் போது ஐ. நா.-வில் சீனிய ரஷ்ய மெம்பரான விஷின்ஸ்கோவை, தன்னுடன் அழைத்து வர டிரிக்வெல் உத்தேசித்திருக்கிறார்.

இம்முயற்சியின் விளைவாக நான்கு வல்லரசுகள் கூட்டம் நடைபெறும் என்று பிரிட்டிஷ் அமெரிக்க வட்டாரங்கள் நம்பிக்கையுடனிருக்கவில்லை.

டிரிக்வெல் முயற்சிகள் பலனளித்தால், பாதுகாப்புக் கௌன்சிலிலுள்ள நான்கு வல்லரசு மெம்பர்கள் கூடிப் பேசலாம்.

வீட்டுப் பஞ்சத்தைத் தீர்க்கப் புதுவழி

உணவுப் பொருள்களை ரேஷன் செய்வதுபோல் வீடுகளையும் ஏன் செய்யக்கூடாது?

சென்னை, ஏப் 21—

மக்களைக் கடுமையாக பாதிக்கும் உணவுக்கு அடுத்தாற்போல், வீடில்லாக் கஷ்டத்தைத் தவிர்ப்பதற்கு சென்னை பச்சையப்பன் கல்லூரி பொருளாதார பேராசிரியர் தோழர் ஏ. முத்தையா ஒரு புது யோசனையைக் கூறுகிறார்.

உணவுப் பொருள்களை ரேஷன் செய்வதுபோல், ஏன் ஒவ்வொரு குடும்பத்திலுள்ள நபர்களைக் கணக்கிட்டு வீடுகளையும் ரேஷன் செய்யக் கூடாது என்று அவர் கேட்கிறார்.

அவர் மேலும் கூறிய விவரங்கள்:-

"சர்க்கார் உணவுப் பொருள்களை ரேஷன் செய்ததினால், அப்பொருள்கள் மிகவும் குறைந்த பட்சத்தில் சப்ளை இருந்தாலும்கூட எல்லாருக்கும் எவ்வித பாரபட்சமில்லாமல் ஓரளவு பெறமுடிகிறது.

உணவுக்கு அடுத்தாற்போல மக்களுக்கு முக்கியமாக உள்ள வீட்டுப் பிரச்னையைச் சமாளிக்க, ஏன் இம்முறையில் ரேஷன் செய்யக்கூடாது?

'சமீபத்தில் நடந்த உலக யுத்தத்தில், அனேகக் கட்டிடம் கட்டும் பொருள்கள் போருக்கென்றே உபயோகிக்கப்பட்டதின் விளைவால், கட்டிட சாமான்கள் கிடைப்பது இன்னும் கடுமையாயிருக்கிறது. இன்னும் 10-ஆண்டுகள்வரை வீடுகள் தாராளமாகக் கட்டப்படுவது சாத்யமல்ல.

"சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கென்றே பிரத்யேகமாக வீடுகள் கொடுப்பதன் வாடகை கட்டுப்பாடு திட்டத்தினல், வீட்டு பஞ்ச நிலைமை ஒருவாறு தீர்க்கமுயற்சிக்கப்பட்டது.

"ஆனல், சர்க்கார் உத்தியோகஸ்தர்தான் இதனல் அனுகூலம் பெற்றனர். யாவரும் பயனடைய வேண்டுமென்றால் வீட்டை ரேஷன் செய்யும் முறையை சர்க்கார் கவனித்தல் வேண்டும்"

மாலை மணி

சென்னை 22—4—50 சனிக்கிழமை

விளம்பரமோ விளம்பரம்!

ஒட்டகம் விழுந்து, விழுந்து சிரித்ததாம்.

"ஏன் ஒட்டகம், சிரிக்கிறாய்? எதைக்கண்டு, என்ன நேர்ந்து விட்டது அப்படி?" என்று எதிரே நின்ற கொக்கு கேட்டதாம்.

"ஒன்றுமில்லை, உன்னைக் கண்டுதான் சிரிக்கிறேன்" என்றதாம் ஒட்டகம்.

"என்னைக் கண்டா? நான் ஒன்றும் செய்யவில்லையே! உனக்குச் சிரிப்பு தோன்றும்படி, நான் என்ன அப்படிப் பைத்தியக்காரத்தனமாக நடந்துகொண்டேன்?" என்று கேட்டதாம் கொக்கு.

'நான் சிரிப்பது உன் செய்கைக்காக அல்ல, உன் உடல் அமைப்பைக் கண்டுதான்" என்று கூறிற்றாம் ஒட்டகம்.

"நான் சிறிய உருவமுடைய வகை இருக்கிறேன் என்று கருதிச் சிரிக்கிறாயா?" என்று வினவிற்றாம் கொக்கு.

'அதற்குக் கூட அல்ல, இவ்வளவு கோணலாக இருக்கிறதே உன் உடலமைப்பு என்பதை எண்ணும்போது தான், எனக்குச் சிரிப்பா பொங்குகிறது" என்றதாம் ஒட்டகம்.

கொக்கைக் கோணலுடையது என்று மட்டுமல்ல, அத்தகைய கோணல் எதுவும் தன்னிடத்தில் இல்லை என்றும் எண்ணி, அகமகிழ்ந்துகொண்டிருந்ததாம் ஒட்டகம்.

* * *

இப்படி ஒரு கதை சொல்லப்படுவதுண்டு சிறுவர்களுக்காக.

கதை கேலி, கிண்டல் மட்டுமல்ல, கருத்தினையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது.

தொட்ட இடமெல்லாம் கோணலை உடைய ஒட்டகம் கொக்கைப் பழிக்கக் கிளம்புகிறது என்றால், தன்னைப்பற்றி எவ்வளவு அறியாமையையும், ஆணவத்தையும் உள்ளடக்கிக் கொண்டிருக்க வேண்டும் என்பதை அதன் மூலம் அறிந்துகொள்ளலாகும்.

கொக்காவது கழுத்தளவிலே கோணல் வடிவினைக் கொண்டது என்று கூறலாம்; ஆனால் ஒட்டகமோ எனில், அவயவங்கள் அனைத்தையும் கோணலாக உடையது! அப்படிப்பட்ட ஒட்டகம், கொக்கைப் பழிப்பதென்றால், ஒட்டகத்தின் தன்மை கண்டு யாரும் சிரிக்கத்தானே செய்வர்.

கொக்கைப் பழித்து நிற்கும் ஒட்டகத்தின் தன்மையில், தன்னையும் நிறுத்தி வைத்துக் கொண்டு அகமகிழ்கிறார் சென்னை அமைச்சர் பக்தவத்சலனார்!

அமைச்சர், தன்னுடைய அதிகாரத்தின் கீழிருக்கும் விளம்பர இலாகாவின் 'இலட்சணத்தை' வெகுவாகப் புகழ்ந்து கொள்ளுகிறார். புகழ்ந்துகொள்ளுவதில் கூடத் தவறு ஒன்றுமில்லை. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு அல்லவா! காங்கிரஸ் ஆட்சிப்பீடம் ஏறுவதற்கு முன்பிருந்த சர்க்காரின் விளம்பர இலாகா, 'கோணல்கள்' பல உடையதாக இருந்ததாம்; இப்பொழுது இந்த 'சுணைர்'களின் ஆட்சியில், 'கோணல்' எதுவுமின்றி நேரிய முறையிலே நடைபெறுகிறதாம்; இப்படிப்பட்ட கருத்தைப் பொழிகிறார், மந்திரி பக்தவத்ஸலனார் விளம்பர டைரக்டர்கள் மாநாட்டில்.

கொக்கைப் பழித்ததாமே ஒட்டகம்; அதைப்போல முன் இலாகாவைப் பழிக்கிறார், இப்பொழுது இருக்கும் இலாகாவின் பீடாதிபதியாக விளங்கும் மந்திரியார் தோழர் பக்தவத்ஸலனார் கொக்கைப் பழித்ததோடு மட்டும் நில்லாமல், தன்னிடத்தில் கோணல் எதுவும் இல்லை என்று ஒட்டகம் வாதிட்டு நின்றால், அது எவ்வளவு விசித்திரமானதாகக் கொள்ளப்படுமோ, அவ்வளவு விசித்திரமானதாக ஆக்கிக்கொள்கிறார் தம் நிலையை, அமைச்சர் பக்தவத்ஸலனார், விளம்பரடைரக்டர்கள் மாநாட்டில்.

முன்பெல்லாம் அரசாங்கத்தின் முயற்சியால்நடைபெறும் விளம்பரச்செய்திகளெல்லாம், மக்களால் நிராதவுடையன வாகவும், மதிப்பற்றனவாகவும் கருதப்பட்டுவந்தனவாம்; அப்படிப்பட்ட அரசாங்க விளக்க விளம்பரங்கள், சுயநல நோக்கமுடையோரின் சொந்தநல விளம்பரத்துக்காகவே பயன்படுத்தப்பட்டு வந்ததாம்; இப்பொழுதுஉள்ளவர்கள் உண்மையும், நல்ல நோக்கமும் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் விளம்பரத்தையே ஜனநாயக நாட்டில் வெளியிடவேண்டும் என்பதன் அவசியத்தை உணர்ந்து நடக்கிறார்களாம்; தங்களுடைய பெயர்களையே விளம்பரப்படுத்திக்கொள்வதோ, தங்களுடைய நடவடிக்கைகள் பற்றியே தப்பட்டைக் கொட்டிக்கொள்வதோ இப்பொழுது கிடையாதாம். எவ்வளவு பெரிய உண்மை(?) எவ்வளவு அருமையாக, அப்பழுக்கின்றி(?) பொய்யாமொழியான(?) அமைச்சர் கூறுகிறார், பார்த்தீர்களா! இதுவல்லவோ அமைச்சர்க்கழகு(?)! சென்னை விளம்பர இலாகா, எவ்வளவு உண்மையான(?). நல்ல நோக்கமுடைய(?), விளம்பரப் பணியினைப் புரிந்து வருகிறது என்பதற்கு, அவ்விலாகாவின் மந்திரியாக விளங்கும் தோழர் பக்தவத்சலனாரின் அந்தக்கூற்றிலிருந்தே எளிதில் அறிந்து கொள்ளலாம்!

சென்னை விளம்பர இலாகா, காங்கிரஸ் மந்திரிகளின் விளம்பரத்துக்காக எள்ளளவும் பயன்படுத்தப்படுவதில்லையாம்! காங்கிரஸ் மந்திரிகள் பொது மக்களின் சர்க்காரை பொதுமக்களின் சார்பாகவே நடத்திச் செல்கிறார்களாம்! இந்தப் 'பொன்மொழிகளை'யும் அமைச்சர் அந்த மாநாட்டிலே புகன்றுள்ளார்!

விளம்பர இலாகா, காங்கிரஸ் மந்திரிகளின் விளம்பரத்துக்காகவும், காங்கிரஸ் கட்சியின் விளம்பரத்துக்காகவும் இருக்கிறதா அல்லது பொது மக்களின் நன்மைக்காக இருக்கிறதா என்பதற்கு "சென்னை செய்தி" என்று ஆங்கிலம், தமிழ் தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும், வரும் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தாலே உண்மை விளங்கிவிடும்! அந்தப் பத்திரிகைகள் விளம்பர இலாகாவால் தான் வெளியிடப்படுகின்றன. காங்கிரஸ் மந்திரி சபை-காங்கிரஸ் கட்சி இவைகளின் விளம்பரத்துக்காக அல்லாமல், வேறு எதற்கும் இல்லை என்பது எளிதில் புலனாகும்! இலாகா, பொது மக்களின் நன்மைக்காக இருக்கிறதென்றால், பொது மக்களில் மாறுபட்டக் கருத்துடையோரின் மொழிகளும் அந்தப் பத்திரிகையில் இடம்பெற்றிருக்க வேண்டுமே? பெற்றிருக்கிறதா? இல்லவே, இல்லை! அது மட்டுமல்லாமல் மாறுபட்டோரின் கருத்துக்கள் நாட்டிற்கு நலம்புரிபத்தக்கனவா அல்லவா என்று ஆராய்ந்து பார்க்கும் ஆராய்ச்சித் திறனும் அற்று, மாறுபட்டோர் என்ற ஒரே காரணத்துக்காக, மாற்றுக் கட்சியாரின், பேச்சு சுதந்திரத்தையும் வேண்டிய மட்டும் இந்தக் காங்கிரஸ் ஆட்சி பறித்து வந்திருக்கும்போது, விளம்பர இலாகாவோ, அல்லது இந்த மந்திரி சபையோ பொது மக்களின் நன்மைக்காகத்தான் இருக்கிறது என்பதை, எந்த நல்லறிவுடையோர் தான் ஒப்புக்கொள்ள இயலும் விளம்பர இலாகா காங்கிரஸ் கட்சிக்காகவும், காங்கிரஸ்காரர்களுக்காகவும் தான் இருக்கிறதே யொழிய, வேறு யாருக்காகவும் இல்லை என்று வெட்ட வெளிச்சமாக மக்களெல்லோருக்கும் தெரிந்திருக்கும்போது, விளம்பர டைரக்டர்கள் மாநாட்டில் பெருமை பேசி நிற்கிறார் மந்திரியார், அந்த இலாகாவின் பொதுத்தன்மை பற்றி! எவ்வளவு கேலிக்குரிய செய்தி—மந்திரி துணிவுடன் பேசி நிற்கிறார்! சாரண அதையும் விளம்பரப்படுத்தி, பெருமை பேசி நிற்க பத்திரிகைகளும், விளம்பர இலாகாவும் இருக்கின்றன என்பதேயாகும்.

ஒட்டகம் தன்னிடத்தில் கோணல் எதுவும் இல்லை என்று நினைத்துக்கொண்டால் எப்படியோ, அப்படி தான் அமைச்சரும் நினைத்துக்கொள்கிறார், தன்னுடைய விளம்பர இலாகாவில் குறை எதுவும் இல்லையென்று! வேடிக்கை—விசித்திரம் இரண்டும் கலந்திருக்கின்றன!

"அரசாங்கத்துக்கும் பத்திரிகையுலகத்திற்கும் எவ்விதத் தகராறும் கிடையாது ஒன்றையொன்று பரஸ்பரம் அறிந்து கொண்டும், கலந்துகொண்டும் காரியங்கள் நடைபெறுகிற சமயங்கள் ஏராளமாக உண்டு"

என்று அரசாங்கத்துக்கும்-பத்திரிகைக்கும் இருக்கும் உறவு முறையைப் பற்றிப் பெருமை பேசி மகிழ்கிறார் மந்திரியார் அரசாங்கத்துக்கும் பத்திரிகைகளுக்கும் ஏன் தகராறு ஏற்படப்போகிறது? எப்படித்தான் ஏற்பட முடியும்? அரசாங்கத்தின் குறைகளைச் சுட்டிக்காட்டி, குற்றத்தைக் கண்டிக்கும் பத்திரிகைகளை எல்லாம் எந்த அளவுக்கு அடக்கி ஒடுக்கமுடியுமோ, அந்த அளவுக்கு அடக்கி ஒடுக்கியான பிறகு, தாளம் போடும் பத்திரிகைகள்தானே அரசாங்கத்தைச் சூழ்ந்து நிற்க முடியும்! அவைகள் அரசாங்கத்தோடு ஒட்டி நிற்காமல், வெட்டியா மடியும்! பத்திரிகை ஆலோசனைக் குழு ஒன்று வைத்து, அதன் ஆலோசனைப் படியே காரியமாற்றி வருவதாக அமைச்சர் கூறுகிறார். யார் அந்தக் குழுவில் இருப்பவர்கள்! தாளம் போடும் பத்திரிகையாசிரியர்கள்தானே! அவர்களில் ஒரிருவர் தன்மான உணர்ச்சியோடு பேசினாலும், அவர்களை அடக்கிவைக்க 'ஏனையோர்' ஏராளமாக இருக்கிறார்களே, அந்தக் குழுவில்! நிலைமை அப்படி இருக்கும்போது, அரசாங்கத்துக்கும், பத்திரிகைகளுக்கும் தகராறு ஏன் வரப்போகிறது!

உண்மையை ஒளிவு மறைவு இல்லாமல் எடுத்துக் கூறி, அரசாங்கத்தின் அடக்குமுறைச் சட்டத்திற்கு அஞ்சாமல், ஆளவந்தார்களின் குற்றங் குறைகளைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறி வரும் பத்திரிகைகளைத்தடைப் படுத்தியும் அபராதம் விதித்தும், பறிமுதல் செய்தும், ஜாமீன் கேட்டும் ஒதுக்கி வைத்துவிட்டு இப்பொழுது வீராப்பு பேசுகிறார் மந்தியார். அரசாங்கத்தின் குற்றங் குறைகளை எடுத்துக் கூற அனுமதி தாராளமாகத் தந்திருக்கிறோம் என்று. எங்கே தந்துள்ளார்? எங்கே பேச்சு சுதந்திரம்? எங்கே எழுத்துச் சுதந்திரம்? எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு, விளம்பர இலாகா நேர்மையுடன் பாடுபட்டுவருகிறது என்கிறார் விளம்பர மந்திரியார். இதை எப்படிநேர்மையுடைய செயலாகக் கொள்ள முடியும்?

காங்கிரஸ் ஆட்சியில், விளம்பர இலாகாநடத்தும் வானொலி நிலையம், பத்திரிகைகள், வெளியிடும் துண்டு வெளியீடுகள், அறிவிக்கும் அறிவிப்புகள், செய்யும் விளம்பரங்கள் எல்லாம் ஒரு கட்சியாகிய காங்கிரஸையும், ஒரு கட்சி அரசாங்கமாகிய காங்கிரஸ் அரசாங்கத்தையும் பற்றியனவேயல்லாமல், வேறொன்றறியோம் 'பராபரமே'! என்ற நிலைமை இருக்கும்போது, சொந்த விளம்பரத்துக்காக விளம்பர இலாகா இல்லை என்றுவிளம்புகிறார், விளம்பர மந்திரி பக்தவத்ஸலனார்!'

'விளம்பரமோ விளம்பரம்!' என்று விலை கூறும் அளவுக்குக் காங்கிரஸ் வந்துவிட்ட பிறகுகூடவா மக்கள் நம்புவர் மந்திரியாரின் கூற்றை?

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

25 - 4 - 50

நஞ்சத்தலையூர்: சி. பி. சிற்றரசு.

விசித்திர விளக்கம்

பாக்கிஸ்தானுடன் இந்தியா செய்து கொண்ட ஒப்பந்தம் எனக்குப் பிடிக்கவில்லை. பதவியைவிட்டு அதனால்தான் விலகிக் கொள்கிறேன், என்று கூறுகிறார் தோழர் சியாம் பிரசாத் முகர்ஜி. விசித்திரமான விளக்கமாகத்தான் தோன்றுகிறது நமக்கு.

கீழ்வங்கம் மூன்றாவது உலகப் போர் மூளும் இடமாக இருக்குமென்று அயல் நாட்டினர் கூறினார்கள்; இந்தியா உடனே படையெடுக்க வேண்டுமென்று, இந்திய உபகண்டத்திலுள்ள வகுப்புவாதத் தலைவர்கள் மட்டுமல்ல, சோஷலிஸ்த் தலைவர்களும் கொக்கரித்தார்கள். நாங்கள் மட்டும் சளைத்தவர்களா எதிர்த்து ஒரு கை பார்த்துத்தான் விடுவோம் என்று பாகிஸ்தானிலும் பலர் கூறிவிட்டனர். அவ்வளவு நெருக்கடியான நிலையில் ஏதோ நல்லெண்ணம் ஏற்பட்டது—அதன் முடிவு இந்திய உபகண்டம் பாகிஸ்தானுடன் நல்லுறவு ஒப்பந்தம் செய்து கொண்டது. எல்லா மக்களும் வரவேற்றார்கள். ஆனால் தோழர் முகர்ஜி கூறுகிறார் தனக்குப் பிடிக்கவில்லை யென்று!

"பாக்கிஸ்தான்பலமுறைகளில் ஒப்பந்தத்தை மீறியுள்ளது, இம்முறையும் மீறும் ஒப்பந்தத்தால் ஒரு பயனும் ஏற்படாது என்று கூறுகிறார். முன்பு மீறியுள்ளதா இல்லையா என்பது இருநாடுகளின் செய்கைகளையும் எடைபோட்டு சர்வதேச நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டியதாகும். நடக்காது என்றுகூறி, நல்லெண்ண ஒப்பந்தத்தைத் தடுப்பது நலமாகாதென்பதே நம் முடிவு.

'பாக்கிஸ்தான் ஒரு இஸ்லாமிய நாடென்பதே இவ்வொப்பந்தத்தால் மறந்துவிடப் படுகிறது' என்பது தோழர் முக்கர்ஜி கூறும் மற்றொரு விசித்திர விளக்கம். இந்து மஹா சபையைச் சேர்ந்தவர் தோழர் முக்கர்ஜி, இந்தியாவை இந்துஸ்தான் ஆக்க வேண்டுமென்று கனவு காண்பவர். இவர் கூறுவதுபோல் நாட்டுப் பிரிவினையை அன்றே எதிர்த்தார் இந்திய உபகண்டத்தையே இந்துஸ்தான் ஆக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு. ஆனால் நாட்டுப் பிரிவினை—பாக்கிஸ்தான் தோழர் ஜின்னாவின் அரசியல் ஆற்றலால் உருவாக்கப்பட்டது. முஸ்லிம் நாடு என்று முதலில் கூறினாலும், மதவெறி மங்கும் காரணத்தால் சிறுபான்மையோருக்குச் சம உரிமை கொடுக்கிறேன் என்று தோழர் லியாக்கத் அலி சம்மதிக்கிறார். பாக்கிஸ்தான் முஸ்லீம் நாடாக இருந்தால்தான் இந்தியாவை மதவெறி மூட்டி, இந்துஸ்தான் ஆக்க முடியுமென்பது அவருடைய எண்ணம் போலும்!

போர் மூளுமோ என்ற நேரத்தில் நல்லெண்ண ஒப்பந்தம் நிறைவேறிற்று இது பிடிக்கவில்லை தோழர் முக்கர்ஜிக்கு! "பாக்கிஸ்தான் மீது இந்தியா படையெடுக்க வேண்டும், இந்து மத வெறி, இதனால் இந்தியாவில் வளர வேண்டும்; முடிவு இந்துஸ்தானாக இருக்கவேண்டும்" என்ற எண்ணத்தோடுதான் தோழர் முக்கர்ஜி பதவி வகித்தார் என்ற சந்தேகம் ஏற்படுகிறது நமக்கு!

அன்பளிப்பு எங்கே ?

★

முறைப்படி காரியம் நடைபெறவேண்டும் என்றீர்கள் !

காரியாலயம் இல்லாமல் ஒரு கட்சி நடத்துவதா என்றீர்கள் !

தலைநகரிலே தங்க ஒரு இடம் இல்லையே என்றீர்கள் !

தலைமைக் காரியாலயம் ! உடனே அமைத்தாலொழிய ஒழுங்காக, கழக வேலைகள் நடைபெறுது என்று **அணி** வரும் கூறினீர்கள் !

தலைமைநிலையக் கட்டிடம் அமைக்க அன்பளிப்பு வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டது.

குறைபட்ட தோழர்களே !
வற்புறுத்திய நண்பர்களே !
ஆர்வம்காட்டிய அன்பர்களே !
யோசனை கூறிய தோழர்களே !

உங்கள் அன்பளிப்பு எங்கே ?
அன்பளிப்பை அனுப்பிவிட்டீர்களா ?

வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் தொலைய வேண்டுமாம் !

தகுதியும் திறமையும் உடையோர் தவிக்கின்றனரும் !

பார்ப்பனியத்திடம் பரிவுகாட்டுகிறார் உணவு மந்திரி

"வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறை முன்பிருந்த ஆட்சியாளரால் ஏற்படுத்தப்பட்டுவிட்டது. அதனாலேயே இன்று அதனை நாம் கடைப் பிடிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இந்த வகுப்புவாரிப் பிரதி நிதித்வ முறை நெடுநாளைக்கு நிலைத்திராது," என்று சென்னை உணவு அமைச்சர் தோழர் ரோச்விக்டோரியா சேலத்தில் கிருஸ்தவர் பொதுக் கூட்டமொன்றில் பேசியபோது குறிப்பிட்டார். மேலும் பேசுகையில் அவர் கூறியதாவது:—

சென்னை சர்க்கார் வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறையைக் கடைப்பிடிப்பது, வகுப்பு உணர்ச்சிக்கு உயிர் ஊட்டுவதற்காக அல்ல புதிய அரசியல் திட்டத்தில் கிருஸ்தவர்களுக்கு அதிக பொறுப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அரசியலார் வகுப்பு வாரி பிரதி நிதித்வமுறைக்கு இனி முக்கியத்வம் அளிக்கக் கூடாது. இம்மாகாணத்தில் பல முக்கியப் பதவிகள் கிருஸ்தவர்களிடமே யுள்ளன. பார்ப்பன சமுதாயமும் இந்த வகுப்புவாரிப் பிரதி நிதித்வ முறை குறித்து கவலைப்படுகிறது. இந்த முறை அமுலில் இருப்பதினால் தகுதியும், திறமையுமுள்ள மாணவர்களுக்குக் கல்வி நிலையங்களில் இடம் கிடைப்பதில்லை. இந்தவகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறை பரம்பரையாக இருந்துவரும் ஒரு முறையாகிவிட்டது. இந்த முறை நீண்டநாள் நிலைத்திராது, விரைவில் மறைந்து போகும். ஆகவே, கிருஸ்தவர்கள் பதவிகளில் தமக்கு முதன்மை வேண்டுமெனப் போட்டியிடக் கூடாது" என்று பேசியுள்ளார்.

பிராமணர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையினால், பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்களாம்! திறமையும், தகுதியுமுள்ள மாணவர்களுக்குக் கல்வி நிலையங்களில் இடங் கிடைப்பதில்லையாம்! இது தான் உணவு அமைச்சரின் கவலை!

கவலைப்பட வேண்டியவர்கள் கூட அவ்வளவு கவலைப்படவில்லை. உணவு அமைச்சர் அவ்வளவு உளம் நோகிறார்! வகுப்பு வாரி பிரதிநிதித்வ முறை பரம்பரை முறையாகி விட்டதாம், அது தொலைய வேண்டுமாம். தொலையத்தான் போகிறதாம்! அமைச்சருக்கு ஏனோ இவ்வளவு ஆத்திரம்? அமைச்சர் ஆத்திரம் கொள்ளும் அளவுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்வமுறை அமைச்சருக்கோ, அவர் தம் சமுதாயத்துக்கோ செய்த தீமை என்ன? பார்ப்பன சமுதாயத்துக்காகப் பரிந்து பேசும் அமைச்சருக்குக் கூற விரும்புகிறோம், இந் நாட்டில் பார்ப்பன சமுதாயத்தின் கொடுமை இல்லாதிருந்திருக்குமானால், வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறையே தோன்றியிராது இன்று கிருஸ்தவ சமுதாயம் கல்வித்துறையில் முன்னேறியுள்ளது என்று பெருமை பேசுகிறார் அமைச்சர். ஆனால் அந்த முன்னேற்றத்துக்கு எது காரணம் என்பதை அவர் அறிவாரா? பார்ப்பனியக் கொடுமை தாளாத காரணத்தாலன்றோ, ரோச் விக்டோரியாவின் முன்னோர்கள் கிருஸ்தவர்களாயினர். அங்ஙனம் மதம்மாறித்தான் கிருஸ்துவ சமுதாயம் முன்னேற முடிந்ததேயன்றி, பார்ப்பன மதத்தின் பிடியிலிருந் தல்லவே!

வகுப்பு வேற்றுமைகளைக் கண்டு மிரளும் அமைச்சருக்கு, வகுப்புகள் தோன்றியவிதம் எப்படி என்பது தெரியாதுபோலும்! பார்ப்பனீயம் அடிமரம் அதன் கிளைகளே வகுப்புகள். இந்த வகுப்புகள்உள்ள வரை வகுப்புவாதமும், அதனை அடிப்படையாகக்கொண்ட சட்டங்களும் இருந்தே தீரும். அதுபோலவே சட்டத்தினால் அந்த மரம் சற்று ஆட்டங் கொடுக்கத்தான் செய்யும். அதுகண்டு யாரும் கவலைப்படுவதில் பயனில்லை.

யூகோ-கிரீஸ் புதிய உறவு

லண்டன், ஏ. 21—

யூகோஸ்லேவியாவுக்கும், கிரீஸுக்கும் இடையே 4 ஆண்டு ராஜீய உறவு முறிவுக்குப் பின் இப்பொழுது மீண்டும் நல்லுறவு ஏற்பட்டிருக்கிறது.

கிரீஸின் புது பிரதமர் ஜெனரல் பிளாஸ்டிராஸை டிட்டோவின் பிரதிநிதி கண்டு பேசியிருக்கிறார்.

பேச்சு சுமுகமாகவே நடைபெற்றதென்றும் எல்லைப் பிரச்னை, கிரேக்க குழந்தைகளைக் கடத்திச் சென்ற பிரச்னை முதலியவை பேசப்படவில்லை என்று கிரீஸ் பிரதமர் கூறுகிறார்.

மலேயாவுக்கு ஜப்பானிய பொருள்கள்

குலாலம்பூர், ஏப் 21—

இவ்வாண்டின் இரண்டாவது மாதத்தில் ரூ 2,50,00,000 மதிப்புள்ள ஜப்பானியப் பொருள்கள் மலேயா வியாபாரிகளால் பெறப்பட்டிருக்கின்றன.

இதில் பெரும்பாலும் ஜப்பானிய ஜவுளிகளே.

மயிலைத் திருவள்ளுவர் கழக 5-வது மாநாடு

23-4-50 காலை 9 மணி

இடம்:—மயிலைக் குயப்பேட்டை நகராண்மைக் கழக சிறுவர் பள்ளி மைதானம்

தலைவர்:—

பாலூர் கண்ணப்பர்

சொற்பொழிவாளர்கள்

காலை:

என். ஜீவரத்தினம்
சி. டி. சரஸ்வதி
பூ. கணேசன்

மாலை:

ரா. பி. சேதுப் பிள்ளை
இரா. நெடுஞ்செழியன்

இரவு 8-மணிக்கு **"பசியின் கொடுமை"** நாடகம் தோழர் சி. பா. ஆதித்தன் தலைமையில் நடைபெறும்.

பார்வையாளர்கட்டணம் அணா 4

இனி நடப்பவை

புரசை, சென்னை:—திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் தோழர் அ. கி. பரந்தாமனார், எம். ஏ. அவர்கள், "திருக்குறளும் பதினெண் கீழ்க் கணக்கும்" என்பதுபற்றிப் புரசை, வைக்கோல்காரன் தெரு நகராண்மைக் கழகப் பள்ளியில் 23-4-50 ஞாயிறு மாலை 6-30 மணிக்குப் பேசுவார்கள்".

* * *

திருச்சிராப்பள்ளி:— திருவள்ளுவர் தமிழ்க் கழகம் இக் கழகத்தின் ஆறுவது ஆண்டு விழா 23—4—50 ஞாயிறன்று காலை 8 30 மணிக்கு திருச்சி பி. ரெத்தினவேலுத்தேவர் ஹாலில் தோழர் எம். பி. பூர்ணலிங்கனார் பி. ஏ. அவர்கள் தலைமையில் கொண்டாடப் பெறும் அதுபோது மேரி அரசினர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை தோழியர் ஆர். இராசமணி அம்மையார் எம். ஏ. எல். டி. அவர்கள் வள்ளுவரும் மகளிரும் என்பது பற்றியும், 'விடுதலை' ஆசிரியர் தோழர் நாராண-துரைக்கண்ணன் அவர்கள் 'குறள் உலகப் பொதுமறை' என்பது பற்றியும், வழக்கறிஞர் தோழர் எம். கே. அனந்தர் 'வள்ளுவரும் தெய்வப் புலமையும்' என்பது பற்றிப் பேசுவர். இசைப் புலவர் எஸ். எஸ். சாமசிவம் (வானொலி நிலையம்) அவர்கள் திருக்குறளை இசைப்பாடல்களாகப் பாடுவார்.

* * *

வண்ணாரப்பேட்டை சென்னை:— 23—4—50 ஞாயிற்றுக் கிழமை காலை 8-30 மணி முதல் 9-30 மணி வரை திருப்பூர்க் குமரன் வாசக சாலை சார்பில் தோழர் பண்டித வித்வான் மீ. பொன். இராமநாதஞ் செட்டியார் அவர்கள் "நீதி நெறிவிளக்க" வகுப்பு நடத்துவார். கல்வியும் பொருளாதாரமும் என்ற பொருள்பற்றிப் பலர் பேசுவர்.

* * *

பச்சாலீஸ்வரன் வட்டம், சென்னை—சென்னை 13-வது வட்டத்தில் தி. மு. க கிளை அமைக்க வேண்டியிருப்பதால், 23—4—50 அன்று காலை 10 மணிக்கு அமைப்புக் கூட்டம் 2, 45 முத்துமாரிச் செட்டித்தெரு, இல்லத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள தோழர்கள் வருகை தருமாறு தோழர் ராமலிங்கம் அழைக்கிறார்.

* * *

சென்னை, குளை:—மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில் 23—4—50 அன்று காலை 10 மணிக்கு குளை வாத்தியார் கந்தப்பிள்ளை தெருவிலுள்ள நகராண்மைக் கழகப்பள்ளியில், திருக்குறளில் 'கூட ஒழுக்கம்' என்னும் பொருள்பற்றி புலவர், தோழர் அ. கி. பரந்தாமனார் எம். ஏ. அவர்கள் பேசுவார்."

* * *

வேலூர்:—திருவள்ளுவர் சொற்பயிற்சிக் கழகம் 23—4—50 ஞாயிறு மாலை கஸ்பா திரௌபதியம்மன் கோவில் கொட்டகையில் நடைபெறும். அதுபோது பல தோழர்கள் "மதம் கடவுள்" என்பதைப் பற்றிப் பேசுவார்கள்.

* * *

மேட்டூர் அணை:— இவ்வூர் தி. மு. கழகத்துவக்க விழா, 24-4-50 திங்கட்கிழமை மாலை பொதுஜன சேவாசங்க மைதானத்தில்தோழர் அ இரத்தினசாமிஅவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது சேலம் அ. சித்தையன் அவர்கள் கொடியேற்றுவார். தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

ரயில்வேக்களில் லஞ்ச ஒழிப்பு

மேலும் மூவருக்குத் தண்டனை

ரயில்வேக்களில் லஞ்ச ஒழிப்பு வேலை தீவிரமாய் நடந்துவருவதன் பலனாக, இப்போது இன்னும் மூன்று பேர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஜி. ஐ. பி. ரயில்வேயில் மாக்ஜிரி அசிஸ்டன்ட் ஸ்டேஷன் மாஸ்டர் லட்சுமணன், பீடி இலைக்கட்டுகளை ரயிலில் அனுப்புவதற்கு 230 ரூபாய் லஞ்சம் வாங்கியதற்காக ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறார்.

புதுடில்லியில் இருக்கும் பஞ்சாப் ரயில்வேயைச் சேர்ந்த தலைமை ரயில் குமாஸ்தா ராமலப்பயாவுக்கு நான்கு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. புதுடில்லியில் தேங்கி நின்றுவிட்ட சர்க்கரை வாகன்களை இரண்டைத் தள்ளிவிடுவதற்கு 20 ரூபாய் சட்ட விரோதமான பிரதிபலன் வேண்டுமென்று கேட்டதற்காக அவர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்.

கால்காஎன்னுமிடத்தில் ரயில்வே நாணிகட்டை மானேஜராயிருந்த ஜோதி பிரசாத், கோர்ட் கலையும் வரையில் காவலிலிருக்கும்படியும், 500 ரூபாய் அபராதம் செலுத்தும்படியும், தவறினால் மேற்கொண்டு ஆறு மாதம் காவலில் இருக்கும்படியும் தண்டனையளிக்கப்பட்டார். ஜல்லந்தர் நகரிலுள்ள சோப் தொழிற்சாலை சொந்தக்காரர் ஒருவருடன் கூட்டாகச் சதி செய்து, நாம்படாத சாக்குகள் வந்ததாகக் கணக்கு எழுதி டி தொழிற்சாலையின் பேரில் பணம் வரவு வைத்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

ரஷ்யாவில் இன்றைய வாழ்க்கை நிலை

லண்டன், ஏ. 21—

ரஷ்யாவில் உள்ள வாழ்க்கை விவரங்களைப்பற்றி ஸ்வாரஸ்யமான தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

ரஷ்யாவின் சிறந்த தொழிலாளி ஒருவர், பெயர் அளவில் 1100 ரூபாய் சம்பளம் பெறுகிறார். ஆனால் வருமானவரி கட்டாயமாக சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய கடன், இன்ஷூரன்ஸ், கட்சிக்குச் சந்தா தொகைகள் எல்லாம்போக அவருக்கு மிஞ்சி கிடைப்பது 900 ரூபிள்களே. இவர் தங்கி வசிக்க சர்க்கார் இரண்டு அறைகளை மட்டுமே அனுமதித்திருக்கின்றனர். இதிலேயே அவர், பெற்றோர், மனைவி சுற்றத்தாருடன் குடும்பத்தை நடத்தியாக வேண்டும்.

இவர்தொழிலாளர்களுக்கான கான்டினிலேயே சாப்பிட்டாக வேண்டும். அதற்காக 180 ரூபிள் கொடுக்கவேண்டியிருக்கிறது. பாக்கியுள்ள 720 ரூபிள்களில் வீட்டுச்செலவு, வாடகை இவைகளுக்குக் குறைந்தது 600 ரூபிள்கள் ஆகும். பாக்கியுள்ளவை பத்திரிகைகள், சிகரெட்டு, சினிமா இவைகளுக்கு சரியாகிவிடும்.

ஒரு பெண்ணுக்கு மிகவும் மலிவான உடைக்கு 300 ரூபிள் வைத்தாக வேண்டும், ரஷ்யாவில் செய்யப்பட்ட செருப்புகள் 280 ரூபிள்கள் விலையுள்ளது.

நார்வேயில் அமெரிக்க ஆயுதங்கள் இறக்குமதி

ஆஸ்லோ, ஏப். 21—

வட அட்லாண்டிக்கின் உடன்படிக்கையின்படி அமெரிக்கா அனுப்பியுள்ள முதல் 'கோட்டா' ஆயுதங்களை இங்கு எவ்வித சம்பவமின்றி கரையில் இறக்கப்பட்டது.

கம்யூனிஸ்டு ஆர்ப்பாட்டங்களை எதிர்பார்த்து பலத்த போலீஸ் காவல் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

செஞ்சீனு-மேல்நாடுகள் தொடர்பு

இந்தியாதான் ஏற்படுத்தி வைக்கவேண்டும்

"சீனாவுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டுள்ள சுமுகமான உறவு போல் இன்னும் சீனாவுக்கும் பிரிட்டனுக்கும் ஏற்படவில்லை. சீனாவை மேல்நாடுகள் நன்கு அறியவும், மேல்நாடுகள் சீனாவைநன்கு அறிந்து கொள்ளவும் இந்தியாவும் அதன் ஸ்தானிகரும் மூலமாகவே எவ்வளவோ சௌகரியமாக இருக்கும் என்று மாஞ்செஸ்டர் கார்டியன் எழுதியிருக்கிறது.

பழமை ஆசியத் தொடர்பை பண்டிதநேரு நன்கு பயன்படுத்திக் கொண்டு, சீனாவுடன் சுமுகமான உறவை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள்

இலங்கைத் தோட்டத்தில் வேலை செய்யும் ஒரு மாதுக்கு ஏப்ரல் 16ந் தேதி 3 குழந்தைகள் பிறந்தன. குழந்தைகளில் ஒன்று ஆண், இரண்டு பெண்கள். தாயும்குழந்தைகளும் சுகமாக இருக்கிறார்கள்.

கழக நடவடிக்கைகள்

மேட்டுப்பாளையம்:-தோழர். மா. தம்பராசு தலைமையில் 9-4-50 ஞாயிற்றுக்கிழமை அன்று தி. மு. க. செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தோழர் இ. பி. இ. சுற்றுப் பிரயாணத்தின்போது நடத்தின கூட்டத்தின் வரவு செலவு சரி பார்க்கப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமைக் கட்டிட நிதிக்கு இக் கழகத்தின் சார்பாக குறைந்த அளவு ரூ 25—0—0 அனுப்புவதாக தீர்மானிக்கப்பட்டது.

தலைமைக் கட்டிட நிதிக்கு செயற்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ரூ. 1—0—0 கொடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

செவ்வாய்ப்பேட்டை, சேலம்:— 11—4—50 இரவு தி. மு. க. செயற்குழுக் கூட்டம் தோழர் ஆர். நாராயணசாமி தலைமையில் கூடி, கீழ்கண்ட தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது. தி. மு. க. கட்டிட நிதிக்கு இக்கழகத்தின் சார்பில் ரூ. 15-0-0 நன்கொடை வசூலித்து அனுப்புவதாக கொடுப்பது. முடிவாக செயலாளர் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

* * *

புதுப்பேட்டை, சென்னை:— 7—4—50 அன்று தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், கழகக் கட்டிடத்தில் தோழர் பொ. மதிவாணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கீழ்காணும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேறியது.

மார்ச் திங்கள் வரவு, செலவு கணக்கு பரிசிலனை செய்யப்பட்டு யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

தலைமைக் கழக கட்டிட நிதிக்காக பணம் வசூலித்து அனுப்புவதாக நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

* * *

கச்சமங்கலம்:—தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 8—4—50 அன்று நடைபெற்றது அதுபோது இக்கழகத்தின் சார்பில் பொதுக் கூட்டம் மே மாத முதல் வாரத்தில் நடத்துவதென்றும் ஆவன செய்ய செயலாளரைக் கேட்டுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

கழக விளம்பர உறுப்பினர் தனது சொந்த விஷயமாக பதவியினின்று விலக விரும்புவதாகக் கொடுக்கப்பட்ட ராஜினாமாக் கடிதம் கூட்டத்தில் படிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. தற்காலிகமாக அப்பதவியை, செயலாளரே வகித்து வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. நன்றிகூற கூட்டம் இனிது கலைந்தது.

* * *

கோவை, ராமநாதபுரம்:—தி. மு. கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம், 12—4—50 அன்று இரவு கழக மனை மாடியில், கோவை மூலச ஆசிரியர் தோழர் என். ஏ. மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முகவுரையாக கூட்டம், கூட்டப்பட்டதின் நோக்கத்தை விளக்கிகூறினர், பின்னர் கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அஞ்சாநெஞ்சர் அழகிரி நினைவு நாளை கழகப் பிரசார நாளாகக் கொண்டு நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது. தலைவர் முகவுரைகூற செயலாளர், பழனிச்சாமி, நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

ஆனைமலை:—10-4-50 தி. மு. க. செயற்குழுகூடி கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது.

1 16-3-50 ல் நடந்த தோழர் சி. பி. சிற்றரசு அவர்களின் பொதுக் கூட்ட, வரவு செலவு கணக்கு சரி பார்த்து ஒத்துக்கொள்ளப்பட்டது.

2 மாவீரன் அழகிரி நினைவு நாளைக் கொண்டாடுவதென தீர்மானிக்கப்பட்டது.

3 தலைமைக் கழக கட்டட நிதிக்கு நன்கொடை அனுப்புவதென முடிவு செய்யப்பட்டது. தோழர் ஏ. எஸ். வேணு அவர்களால் கழகத்திற்கு அறிஞரின் உருவப்படம் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டதை இக்கூட்டம் மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, அன்னாருக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறது

* * *

செயங்கொண்டம்:— சொற்பயிற்சிக் கூட்டம் முடிந்ததும், தோழர் பலவசர அவர்கள் இல்லத்தில் தி. மு. க. நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கூடியது. தோழர் எம். பாஸ்கரன் தலைமைதாங்கினர். கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. 6-3-50 ல் நடந்த பொதுக்கூட்ட வரவு செலவு ஒப்புக்கொள்ளப்பட்டது.

உடையார்பாளையம் தாலுகாவில் தி. மு. க, பிரசாரம் செய்வது. நாடகம் நடத்தி பிரசாரத்திற்காக நிதி கொடுப்பது, சந்தா வசூல் செய்வதற்காக தோழர் இராசாராம் அவர்களை நியமிக்கிறது.

கழகச் சார்பில் தலைமை கழக கட்டிட நிதிக்கு ரூபாய் பத்தும், நன்கொடையாக கிடைக்கும் தொகைகளையும் அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது.

வினை செயற்குழு உறுப்பினர்களாக தோழர்கள் எம். பாஸ்கரன், க. ஏ. இராமச்சந்திரன் ஆகியோரை சேர்த்துக்கொள்வது. செயற்குழு உறுப்பினராக இருக்கும் தோழர் சாமிநாதனுக்குப் பதில் தோழர் சே. காஜா உசேன் அவர்களைச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

* * *

காரை:— 12-4-50 அன்று செயற்குழுக் கூட்டத்தில் தோழர் பெருமாள் அவர்களை தஞ்சை மாவட்ட அமைப்புக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளராக செயலாற்றி வந்த தோழர் சே. இராசமணி பதவியிலிருந்து உடல்நலமின்மையால் விலகிக்கொண்டதால், மேற்படி பதவிக்குத் தோழர் சே. தர்மலிங்கத்தைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

"உனக்கென்று டெலிபோன் வைத்துக்கொள்"

சென்னை, ஏப். 20—

"உனக்கென்று டெலிபோன் வைத்துக்கொள்" என்ற திட்டத்தின், கீழ் இதுவரை சுமார் 800 மனுக்களுக்குத்தான் டெலிபோன் சர்வீஸ் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்னும் மூன்று அல்லது நான்கு மாதங்கள் வரை இதர மனுக்களுக்கு "கனெக்ஷன்" கொடுப்பது இப்பொழுது சாத்யமில்லை என்று கூறப்படுகிறது.

இதன் காரணம் யாதெனில் அதிகமாக "ஸர்வீஸ்" கொடுப்பதற்குப் போதிய கருவிகள் இல்லை என்றும், இப்பிரச்னையை சரிப்படுத்த வெளிநாடுகளிலிருந்து இதற்கு வேண்டிய கருவிகள் மூன்று அல்லது நான்கு மாதங்களில் பெறுவதற்கு ஏற்பாடு செய்துள்ளதாகவும், அவைகள் வந்த பின்புதான் "கனெக்ஷன்" கொடுப்பதற்கு சாத்யமாகும் என்றும் கூறப்படுகிறது.

"இந்தியா ஹவுஸ்" முன் மறியல்!

ஹைகமிஷனர் போலீஸ் உதவியை நாடுகிறார்

லண்டன், ஏப். 20—

இந்தியா ஹவுஸ் முன்பு நாளை காலை சத்யாக்ரகம் செய்ய உத்தேசித்துள்ள தோழர் குருசரண்தாஸ்சரண் சத்யாக்ரகம் நடத்தாமல் தடுக்கும்படி 'வெஸ்டிரீட்' போலீஸாரை இந்திய ஹைகமிஷனர் தோழர் கிருஷ்ணமேனன் உத்யோக முறையில் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

அவர் கேட்கும் அந்த 5 பௌன்ஸைக் கொடுத்து அவரை அனுப்பிவிடலாமே என்று ஒரு நிருபர் யோசனை தெரிவித்தற்கு, இந்தியா ஹவுஸ் அதிகாரி ஒருவர் 'முடியாது' என்று அழுத்தம் திருத்தமாக பதிலளித்தார்.

லண்டன் நகரில் நடைபெறும் முதல்சத்யாக்ரகமான காலை ஏராளக் கூட்டம்வரும் என்றும், நிருபர்கள், போட்டோகிராபர்கள் கட்டாயம்வருவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

எதிரிகளின் உறுதியை குலைக்கப் புதிய வழி

நியூயார்க், ஏப். 20—

தீவிரமாக எதிர்க்கவேண்டும் என்ற உறுதியுடன் கூடிய எதிரிகளின் மனஉறுதியைக் குலைத்துவிடும் தன்மையுள்ள ஒரு விதவாயுவை யுனைடெட் ஸ்டேட்ஸ் தயாரித்து வருகிறதென்றும், இதனால் ரத்தம் சிந்தாமலேயே வெற்றி காணமுடியும் என்றும் யு. எஸ். ராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் அந்தோனி மக்காலிப் அறிவித்தார்.

இத்தகைய சாதனங்களை அமெரிக்கா ஒருநாளும் முதலில் உபயோகிக்காது என்றும், பிறர் உபயோகித்தால் பதிலுக்கே அமெரிக்கா பிரயோகிக்கும் என்றும் அவர் கூறினர்.

பல ஜெர்மன் விஷவாயு நிபுணர்களை அழைத்து வைத்துக்கொண்டு ரஷ்யா ஏதோ செய்து வருகிறதென்றும் அவர் கூறினர்.

கோபுரமீதிருந்து குதித்துமாண்டார்!

பாரிஸ், ஏப். 20—

பாரிஸ் மிகப் பிரசித்திபெற்ற 'ஈபல்' டவரிலிருந்து 64 வயதுள்ள பிரெஞ்சுக்காரர் 900 அடி உயரத்தில் ஏறி குதித்து உயிர்மாண்டார். குதுக்கேயுள்ள தண்டவாளத்தில் இவர் உடல் அகப்பட்டுக்கொண்டதால், அதை மிகப் பிரயாசையின் பேரில் தீயணைக்கும் படையினர் கீழே இறக்கினர்.

இந்த டவரில் சில தினங்களுக்குள் ஏற்பட்ட மூன்றாவது தற்கொலையாகும்.

விசித்திர கோழிமுட்டை

விட்ஸ்டேவிச்சென்ட், ஏப். 20—

இங்கு ஒரு கோழி விசித்திரமான முட்டையிட்டிருக்கிறது. அம்முட்டையை தரையில் வைத்தால் தஞ்சாவூர் பொம்மையாகிய எழுந்து நிற்கிறதாம். இந்த கோழியின் சொந்தக்காரனுக்குப் பேராச்சரியத்தை விளைவித்திருக்கிறது.

இது ஏன் இப்படி என்று விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்ய வருமுன்னமே அம்முட்டைக் கீழே விழுந்து உடைந்துபோயிற்று.

சுட்டுத்தள்ளப்பட்ட அமெரிக்க விமானம்

ரகசிய ராடார் கருவி இருந்தது?

லண்டன், ஏப். 21—

பால்டிக்கில் காணமற் மறைந்த யு. எஸ். விமானம் ரஷ்யர்களால் சுட்டுத்தள்ளப்பட்டிருக்க வேண்டும் என்று அமெரிக்காவில் கருதப்படுகிறது. அந்த விமானத்தில் இரகசிய ராடார் சாதனம்ஒன்று இருந்ததாகவும் அதைக் கைப்பற்றவே ரஷ்யா முயன்றதாகவும் கூறப்படுகிறது.

இதை வாஷிங்டன் அதிகாரிகள் ஊர்ஜிதம் செய்யவோ, மறுக்கவோ இல்லை.

ரஷ்யர்கள் இந்த விமானத்தை இறக்கும்படி கிரப்பந்திருக்க வேண்டும் என்றும், இந்த ராடார் ரகசியம் தெரிந்துவிடுமோ என்று அமெரிக்க விமானம் அதற்கு மறுத்திருக்கவேண்டும் என்றும், கூறப்படுவதை வாஷிங்டன் ராஜாங்க அதிகாரி ஒருவர் மறுக்கிறார்.

பண்டிட்நேருவிடம் பஞ்சாப் விவசாயிகள் பேட்டி

'நிலத்திலிருந்து வெளியேற்றுவதை நிறுத்திவையுங்கள்'

புதடெல்லி, ஏப். 21—

பஞ்சாபில் நிலங்களில் குத்தகைக்கு வேலை செய்யும் ரைத்துகளை வெளியேற்றுவதை நிலச் சீர்திருத்தச் சட்டம் செய்யும்வரை ஒத்திவைக்கும்படி செய்யவேண்டும் என்று, பஞ்சாப் சோஷலிஸ்ட்கட்சியின் சார்பில் ஒரு தூதகோஷ்டி இந்தியாவின் முதல் மந்திரி பண்டிட் நேருவைக் கண்டு வற்புறுத்தியிருக்கிறது.

நிலத்தில் வேலை செய்துவருபவர்கள் கொடுக்கும் கிஸ்திகளை பொருள்களாகப் பெறாமல், பணமாகப் பெற பஞ்சாப் சர்க்காரை இணங்கச் செய்யவேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்தியிருக்கின்றனர்.

இத்தூதுகோஷ்டியின் தலைவர் புருபசர் திலக்ராஜ்சாட்டா குனோப் பிரும்பிடம் கூறுகையில் ஹிஸ்ஸாரில் 13000 ரயத்துகளின் குடும்பங்களுக்கும், பிரோஸ்பூரில் 2000 ரயத்து குடும்பங்களுக்கும் வெளியேற்ற நோட்டீஸ் தரப்பட்டிருக்கிறதென்று, இவர்களைத் தவிர இன்னும் எவ்வளவோ குடும்பங்கள் வெளியேற்றப்படும் நிலைமையில் இருக்கின்றனர் என்றும் கூறினர்.

யுத்தத்தினல் சீர்குலைந்த ஐரோப்பிய நாடுகள்

வெகுவேகமாக புதுஉருபெற்று வருகின்றன

யுத்தம் முடிந்து 5 ஆண்டுகளாகியும் மேற்கு ஐரோப்பாவில் இன்னும் 50,00,000 வீடுகள் கட்டிமுடியவேண்டியிருக்கிறது. புது வீடுகளையும், மாளிகைகளையும் அதிகமாக கட்டியதில் பிரிட்டன் தான் முதல் ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது.

ஒவ்வொரு ஐரோப்பிய நாடும் எவ்வளவு புது கட்டிடங்களை யுத்தம் முடிந்ததிலிருந்து கட்டி முடித்திருக்கிறது என்பதற்கான புள்ளி விவரங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

பொய்ப் பிரசாரம்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

...வைப்பற்றிக் கவலைப்படாதீர்கள், நம்நாட்டு வளப்பத்தை விளக்குங்கள்' என்று கூறவில்லை தோழர் ட்ரூமன். வீரோதி நாட்டில் வேவு பார்த்து உண்மையை விளக்கும்படி கூறுகிறார்! அயல்நாடுகளிலிருந்து மாணவர்கள் முதல் பலர் அமெரிக்காவை வந்து காணும்படித் தூண்டவேண்டும்.

ஏன்? 102 மாடிகள் உள்ள எம்பயர் ஸ்டேட் மாளிகையையும், டெலிபோன் எக்சேஞ்சு கட்டிடத்தையும், ராக்பெல்லர்வட்டத்தையும் ஏழை இந்திய நாட்டிலிருந்து செல்பவன் கண்டால், முதலாளித்வ முறையை மோகித்துவிடுவான் என்றா? அவன் அவைகளைமட்டும்தானே காணமுடியும்; அதேது இருக்கும் நீக்ரோக்கள், நிலைகலங்கி நிற்கும் மிஸ்ஸௌரியைக் காணமுடியாதே!

சென்னைக்கு வந்தார் சீனவிலிருந்து ஒரு புத்த பிக்ஷு. அவரை மெரினா கடற்கரைக்கு அழைத்துச்சென்று அழகு எவ்வாறு இருக்கிறதென்று கேட்டார்கள். அவர் கூறினர் "நீலக்கடலும் வெண்மையான மணலும், சிவந்த கட்டிடங்களும், பசுமையான மரங்களும், கருப்பான பாதையும் உண்மையிலேயே கண்ணைக் கவர்கின்றன" என்று உண்மைதான்: மெரினவுக்கு அடுத்துள்ள கொச்சிக்குப்பத்தைக் காட்டியிருந்தால் அவர் இவ்வாறு கூறியிருப்பாரா? சீனபிக்ஷு சென்னையில் கண்டது தான், நியூபார்க்கில் அயல் நாட்டான் காண்பான்.

முதலாளித்துவமும், பொதுவுடமையும் நேர் மாறானவை. ஏனைய வட்டத்தில் ஏதாவதொன்று அழிந்துவிடும்; அது முதலாளித்துவமாகத்தான் இருக்கக் கூடுமென்று உலகப் போக்கு காட்டுகிறது. இந்நிலையில் கம்யூனிஸத்தை ஒழித்துவிட முடியுமென்று ட்ரூமன் கனவு காண்பது நடக்கக் கூடியதா?

அ. இ. ரயில்வே தொழிலாளர் சம்மேளனம்

அசோக்மேத்தா புதிய தலைவர் ஆகலாம்

புதுடில்லி, ஏப். 21—

அகில-இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் வருஷாந்திரக் கூட்டம் பம்பாயில் ஜூன் மாதம் 7-ந்தேதி நடைபெறவிருக்கிறது.

சம்மேளனத்துக்கு புது சட்ட திட்டங்கள் இக்கூட்டத்தில் ஏற்படுத்தப்படுவதுடன் பொதுக்,ரயில்வேக்களின் தேசிய யூனியன் என்று மாற்றப்படலாம்.

இப்பொழுது சம்மேளனத்தின் தலைவராகவுள்ள தோழர் ஜெயப்பிரகாஷ்நாராயண் தலைமைப் பதவியை விட்டு விலகுவார் என்று செய்தி மறித்த வட்டாரங்களில் கூறப்படுகிறது. மீண்டும் தலைவர் பதவிக்கு தேர்தலுக்கு நிற்க அவர் விரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது. தோழர் அசோக்மேத்தா பெடரேஷனின் தலைவராக ஆகலாம் என்றும் கூறப்படுகிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.